**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண் : 42/2021**
**வாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: சுப்பிரமணியம் (வா.சா.1 ) | நாள்: 04.07.2026 |
| த.பெ: | |

**2026ம் ஆண்டு ஜுலை மாதம் 04ம் நாள் சனிக்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் இலக்கியா அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி (4ம்– பிரதிவாதி தரப்பு):–**

நீதிமன்ற உத்தரவின் பேரில் தான் நான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ன் அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்யும்போது இந்த அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரம் 08.05.1998ல் எழுதியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.2 எழுதும்போது நான், ராமாத்தாள், ராஜம்மாள், ஆகிய மூவரும் சேர்ந்து கொடுமுடி சார் பதிவாளர் அலுவலம் சென்று எழுதி கொண்டோம் என்றால் சரிதான். பத்திரத்தை எழுதியவரும் எனக்கு நன்கு பழக்கமானவர். பத்திரத்தில் உள்ள சாட்சிகளும் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். சாட்சிகள் நான் சொல்லி தான் பத்திரத்தில் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள வாசகங்கள் நான் சொல்லிதான் எழுதியது என்றால் சரியல்ல என் அப்பா எழுதியது.

2. வா.சா.ஆ.2 பத்திரம் எழுதும் போது மூல ஆவணமான வா.சா.ஆ.1 பத்திரத்தின் அசலையும் கொண்டு சென்று பத்திரம் தயார் செய்தோம் என்றால் சரிதான். வா.சா.1ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து விவரத்தில் சென்னசமுத்திரம் கிராமம் க.ச.எண்.229/1ல் நான்கு செக்குபந்தி கண்டு சுமார் 1/2 செண்ட் உள்ள காலி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.04 11:00:44 +0530

பத்திரத்தில்சொத்து விவரத்தில் 1/2 செண்ட் காலி இடம் என்று தான் கண்டுள்ளது. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்து பதிவு செய்யும் போது சொத்தை அளந்து பார்த்து எழுதினேன் என்றால் சரிதான். அளந்து பார்த்ததற்கான மேப் எதுவும் நான் வா.சா.ஆ.2ல் இணைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 29.11.1972 வருடத்திய ஆவணம் குறிப்பிட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 29.11.1972 வருடத்திய ஆவணம் பாககரார் பத்திரம் ஆகும். மேற்படி பாககரார் பத்திரத்தின் அசல் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். மேற்சொன்ன பாககரார் பத்திரத்தின் நகலை காண்பித்தால் என்னால் அந்த ஆவணம் தான் என்று சொல்ல முடியுமா என்றால் முடியும், ஆனால் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி பாககரார் பத்திரத்தில் இருந்து வேறுபட்டுள்ளது.

3. வா.சா.ஆ.1 29.11.1972 பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும், தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். வா.சா.ஆ.1ல் 29.11.1972 எனது அப்பா மாரிநாயக்கர், அவரது வாரிசுகளான மலையநாயக்கர், முத்துசாமி நாயக்கர், மற்றும் நான் ஆகியோர்கள் சேர்ந்து பாகபிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 29.11.1972 பாகபிரிவினை பத்திரத்தில் என்னென்ன சொத்துகள் எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதோ அது முழுவதயைம் பிரித்துவிட்டோம் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு 29.11.1972ம் தேதிக்கு பின்னிட்டு பொதுவில் பிரிபடாத சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். 29.11.1972 பாகபிரிவினை படி மாரிநாயக்கருக்கு A Schedule சொத்துக்களும், மலையப்ப நாயக்கருக்கு B Schedule சொத்துக்களும், முத்துசாமி நாயக்கருக்கு C Schedule சொத்துக்களும், எனக்கு D Schedule சொத்துக்களும் வந்தது என்றால் சரிதான்.

4. தாவா சொத்து 29.11.1972 பாகபிரிவினை பத்திரத்தில் உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்தானது மேற்படி பாகபிரிவினை படி யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனது அக்கா ராமாத்தாளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 29.11.1972 பத்திரத்தில் தாவா சொத்து ராமாத்தாளுக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.07.04 11:00:49 +0530

செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சொத்துக்காக வேண்டி நான் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ராமாத்தாளை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கலாம். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சொல்லும்படியான 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வீடு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் ஓட்டு வீடு இருந்தது. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் என்னால் பொய்யாக தயாரிக்கப்பட்டு இந்த வழக்கில் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. ராஜம்மாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எனக்கோ, எனது சகோதரர்களுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கூட்டுப்பங்குதாரர்கள் யாரும் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக அதன் ரி.ச. அளவுகள் பொய்யாக சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்தின் மின்இணைப்புகள் குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான், தாசா சொத்திற்கு மின் இணைப்பு இல்லை. நானும், ராமாத்தாளும் இத்தனை வருடங்களாக தாவா சொத்தை அனுபவித்து வருவதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 04.06.1983ல் மாரிநாயக்கர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை இந்த பிரதிவாதிக்கும், அவரது சகோதரர் முருகேசன் என்பவருக்கும் எழுதி வைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்படி தான் அ.வ.எண்.745/2020 பாகபிரிவினை வழக்கில் அவர்களுக்குள் சமரசம் ஏற்பட்டு பாகம் பிரித்தார்கள் என்றால் சரிதான். நான் அ.வ.எண்.745/2020 வழக்கின் தீர்ப்பாணையை எதிர்க்க எனக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எதிர் வழக்குமூலம் இல்லாததால், இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி ஆகத்தக்கது என்றால் சரியல்ல. நான் 29.11.1972 பாகபிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் அதில் யார் யாருக்கு என்னென்ன சொத்து பாத்தியப்பட்டுள்ளது என்பது தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.04 11:00:53 +0530

**மறுவிசாரணை :–இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.04 11:00:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.